செய்தி வெளியீடு எண் :35 நாள் :29.03.2020

# பத்திரிக்கைச் செய்தி

கொரோனா வைரஸ் நோயை முற்றிலும் தடுக்கும் விதமாக சமூக தனிமைப்படுத்துதலை தீவிரப்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசின் உத்தரவின்பேரில் தேனி மாவட்டத்தில் குற்றவியல் நடைமுறைச் சட்ட பிரிவு 144-இன் கீழ் ஊரடங்கு உத்தரவு கடந்த 24.03.2020 அன்று மாலை 6.00 மணி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்களோ அல்லது சுற்றுலா பயணிகளோ ஏதாவது அண்டை மாநிலங்களுக்குச் சென்று அங்கிருந்து சொந்த ஊருக்கு (தேனி மாவட்டம்) திரும்ப முடியாமல் இருந்தால், இவர்கள் தங்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் வேறு ஏதேனும் உதவிகள் கிடைப்பதில் தடையிருந்தால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு அலுவலக மேலாளர் (குற்றவியல்) என்பவரது அலைபேசி எண். **8778751833**-இல் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் தேனி மாவட்டத்தில் தங்கியுள்ள பிற மாவட்டத்தைச் சேர்ந்த மக்களை சம்மந்தப்பட்ட நிறுவனம் பொறுப்பேற்று அவர்களுக்குரிய தங்குமிடம் மற்றும் உணவு வசதி செய்து கொடுக்க வேண்டியது அந்த நிறுவனங்களின் பொறுப்பாகும். தவறும்பட்சத்தில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களின் மீது உரிய சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த வழிமுறையில் தங்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை பெறுவதிலோ அல்லது இதர உதவிகள் பெறுவதிலோ சிரமத்தினை எதிர்கொண்டால் இதே எண்ணில் தொடர்பு கொண்டு தங்களது குறைகளை தெரிவிக்கலாம்.

மேலும் பொதுமக்கள் திருமணம், மருத்துவ சிகிச்சை, இறப்பு போன்ற தவிர்க்க முடியாத நிகழ்வுகளுக்கு செல்வதாக இருந்தால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் செயல்படும் கட்டுப்பாட்டு அறையில் உள்ள தொலைபேசி எண் 04546-261730, வாட்ஸ் அப் வசதி கொண்ட அலைபேசி எண் 9176104100 மற்றும் thenispecialcontrolcovid19@gmail.com என்ற மின்னஞ்சலிலும் தொடர்பு கொண்டு உரிய அனுமதிசீட்டு பெற்றுக் கொள்ளலாம்.

வேளாண்சார்ந்த அத்தியாவசிய பொருட்களை கொண்டுசெல்ல எந்த தடையும் இல்லை. அத்தியாவசியப் பொருட்களை கொண்டு செல்வதில் ஏதாவது சிக்கல்கள் இருப்பின் 9944944333 என்ற அலைபேசி எண்ணில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) என்பவரை தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவசாயிகளின் நலன் கருதி உரம் மற்றும் பூச்சி மருந்துக் கடைகள் தமிழக அரசின் அறிவுறுத்தலின்படி திறந்து வைக்கப்பட்டிருக்கும் எனவும், விவசாயிகளின் வேளாண் விளைபொருட்களை தங்கு தடையின்றி கொண்டு செல்லலாம் எனவும், அவற்றை மொத்த சந்தையில் மாலை 6.00 மணி முதல் காலை 6.00 மணி வரை இறக்கிக்கொள்ளலாம் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**